**சுருக்கம்**

பேரூராட்சிகள் நிர்வாகம் – பேரூராட்சிகளின் ஆணையரக உதவி இயக்குநர் (பொது) மற்றும் உதவி இயக்குநர் (திட்டம்) ஆகியோரின் பயன்பாட்டில் இருந்த பொலிரோ வாகனம் (TN 20 G 1067) கழிவு செய்யப்பட்டது – புதிய வாகனம் வாங்குவதற்கு ரூ.7,67,783/- நிதி ஒதுக்கீடு செய்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.2) துறை**

அரசாணை (ப) எண்.348 நாள்: 29.09.2022

சுபகிருது வருடம் புரட்டாசி –12

திருவள்ளுவர் ஆண்டு – 2053

**படிக்க:**

1. அரசு கடிதம் எண்.24717/Svp.1/2005–1, ஊரக வளர்ச்சி துறை, நாள்: 23.06.2005.
2. பேரூராட்சிகளின் ஆணையரின் கடித எண். 6590/2021/ஈ4 நாள்: 03.08.2021.

*******

**ஆணை:–**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை மேற்பார்வையிடுவதற்கு ஏதுவாக சிறப்பு கிராம ஊராட்சிகளின் இயக்குநருக்கு ஒரு பொலிரோ ஈப்பு வாகனம் (TN 20 G 1067) வாங்கி கொள்ள அரசால் அனுமதி அளிக்கப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட பேரூராட்சிகளின் ஆணையர் அவர்களின் கடிதத்தில், மேலே பத்தி 1–ல் குறிப்பிடப்பட்டுள்ள பொலிரோ ஈப்பு வாகனம் (TN 20 G 1067), 02.09.2005–ல் வாங்கப்பட்டு 15 வருடங்களுக்கு மேல் நிறைவடைந்து 3,03,207 கி.மீக்கு மேலாக இயக்கப்பட்டு பழுதடைந்து இயங்காமல் இருந்ததால், மோட்டார் வாகன பராமரிப்புத் துறையிடமிருந்து கழிவுச் சான்று பெறப்பட்டது என்றும், அசல் வாகன பதிவுச்சான்று வட்டார போக்குவரத்து அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டு ஒப்படைப்புச்சான்று பெறப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார். மேலும், மாநில மற்றும் ஒன்றிய அரசின் திட்டப்பணிகள் தொடர்பாக நடைபெறும் கூட்டங்களுக்கு தலைமைச் செயலகம், டுபிட்கோ, குடிசை மாற்று வாரியம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை அலுவலகம் ஆகிய அலுவலகங்களுக்கு சென்று வருவதற்கு பேரூராட்சிகளின் ஆணையரக அலுவலகத்திற்கு ஈப்பு வாகனம் தேவைப்படுகிறது என்றும், மேற்படி கழிவு நீக்கம்

செய்யப்பட்ட பொலிரோ ஈப்பு வாகனத்திற்கு (TN 20 G 1067) பதிலாக புதிய ஈப்பு வாகனம் வாங்குவதற்கு ரூ.7,67,783/- நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வழங்குமாறு பேரூராட்சிகளின் ஆணையர் அரசைக் கோரியுள்ளார்.

3. பேரூராட்சிகளின் ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்ததில், பேரூராட்சிகளின் ஆணையரக உதவி இயக்குநர் (பொது) மற்றும் உதவி இயக்குநர் (திட்டம்) ஆகியோரின் அலுவலக பயன்பாட்டில் இருந்து வந்த கழிவு செய்யப்பட்ட பொலிரோ ஈப்பு வாகனத்திற்கு (TN 20 G 1067) பதிலாக புதிய BS-VI ரக Bolero வாகனம் வாங்குவதற்கு ரூ.7,67,783/-(ரூபாய் ஏழு இலட்சத்து அறுபத்தேழாயிரத்து எழுநூற்று எண்பத்து மூன்று மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலும், பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2515-00 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் - 001 நெறிப்படுத்தலும் நிருவாகமும் - மாநிலச் செலவினங்கள் -AI-பேரூராட்சி இயக்ககம் - 321 மோட்டார் வண்டிகள்- 01 வாங்குதல்.

(IFHRMS த.தொ.கு: 2515-00-001-AI-321-01)

5. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கு தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.7,67,783/-, 2022-23 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய ஒதுக்கீட்டை எதிர்நோக்கி, மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள பேரூராட்சி ஆணையர் அவர்களுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. மேலும் இச்செலவினத்தை 2022-23 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்க்க உரிய நேரத்தில் கருத்துருவினை நிதி (ந.நி.(ம)கு.வ) துறைக்கு அனுப்புமாறு பேரூராட்சி ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை உள் (போக்குவரத்து) துறையின் அ.சா.எண். 68559/போ.வ.4/2021-1, நாள்: 07.12.2021 மற்றும் நிதித்துறையின் அ.சா.எண்.43884/நிதி/2022 நாள்: 27.09.2022-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. அதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.1339 (ஆயிரத்து முந்நூற்று முப்பத்தி ஒன்பது)

(IFHRMS ASL No. 2022091339)

// ஆளுநரின் ஆணைப்படி //

சிவ் தாஸ் மீனா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

**பெறுநர்**
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை -600028.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்.
மாநில கணக்காயர், சென்னை - 600018.

இயக்குநர், மோட்டார் வாகன பராமரிப்புத் துறை,
வேளச்சேரி, சென்னை – 83.

**நகல்:–**

நிதித் (ந.நி (ம) கு.வ/வ.செ.பொ.II/வ.வ.I) துறை, சென்னை–600 009.
உள்(போக்குவரத்து–IV) துறை, சென்னை –600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.ந.மு.2) துறை,
சென்னை –600 009.
இருப்புக் கோப்பு/உபரி நகல்

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

இ. பரிமளா [signature]
**பிரிவு அலுவலர்**
29/09/22